


திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கோடை வெப்பத்தை தணிக்க உதவும் வகையில் செவ்வாய்பேட்டை பகுதியில் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி ஒன்றியச் செயலாளர் தொழுவூர் சே.பிரேம்ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து இளநீர், மோர், ரோஸ் மில்க், பாதாம் மில்க், தண்ணீர், பழம் வகைகள் வழங்கினர் உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ.ரமேஷ்,மாவட்ட நிர்வாகிகள்காயத்திரி ஸ்ரீதர், ஜி.விமல்வர்ஷன், டி.முரளி கிருஷ்ணன்,ஞா.ரமேஷ், மு.ராஜா, ஆர்.திலீப் ராஜ், இமானுவேல், வ.ஹரி, கே.வி.ஆனந்த், சதீஷ், தாஸ், உதயகுமார், ராஜ்குமார், ஸ்டேல்ல மேரி, செல்வி, பார்த்திபன், அன்பு, மோகன், ஈஸ்வரன், நாகராஜ், சுரேஷ், செந்தில், எத்திராஜ், மணிவண்ணன், ஞானசேகர், மோகனசுந்தரம் உள்பட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்ட அவை தலைவர் திராவிட பக்தன், தலைமையில் ஒன்றிய செயலாளர் பிரகாஷ் ஞான ஒளி, ஏற்பாட்டில் தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிநீர், மோர், இளநீர், தர்பூசணி, கிருனி பழம், குளிர்பானங்கள், ஆகியவற்றை வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர்கள் கூளூர் எம். ராஜேந்திரன், க. ஹரிகிருஷ்ணன், நிர்வாகிகள் மாஸ்டர் குரு தாஸ் பி.கே. நாகராஜ், எம்.சேகர்,பெருமாள்,வாசு, மாலதி, மெய்யழகன், ஜெகதா, மந்தவெளியன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்

### வங்கக் கடலில் உருவாகும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி

# நெல்லை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் கனமழை பெய்யும்!

சென்னை, மே.12-

வங்கக் கடலில் உருவாகும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக திருநெல்வேலி உள்ளிட்ட 4 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 5.8 கிமீ உயரம் வரை நிலவுகிறது.

இதன் காரணமாக ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் உருவாகக்கூடும். இதன் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 12 முதல் 14ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும், 15ம் தேதி ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய 4 மாவட்டங்களில் 12ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை ஆகிய டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், 13ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

14, 15 தேதிகளில் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் 14ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறையக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின் படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 17 செமீ, நாலுமுக்கில் 16 செமீ, காக்காச்சியில் 15 செமீ, தூத்துக்குடி மாவட்டம் பெருங்குளத்தில் 14 செமீ, திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில் 13 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தில் 8 செமீ, ராமேசுவரம், கோவை வேளாண் பல்கலைக்கழகம், பாம்பன், சென்னை சைதாப்பேட்டையில் தலா 7 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தொழிற்சங்கத் தலைவர்

# புதுக்கோட்டை தோழர் ஜி.சிங்கமுத்து மறைவு!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கல்!

புதுக்கோட்டை, மே.12-

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் புதுக்கோட்டை மாவட்ட முன்னோடியும், மூத்த தொழிற் சங்கத் தலைவருமான தோழர் வி.சிங்கமுத்து (85) நேற்று முன்தினம் (10.05.2026) காலையில் மறைவுற்றார் என்ற துயரச் செய்தி ஆழ்ந்த வேதனை அளிக்கிறது.

புதுக்கோட்டை நகரில் இயங்கி வந்த நிஜாம் லேடி புகையிலை கம்பெனியில் தொழிலாளியாக வாழ்க்கையை தொடங்கிய சிங்கமுத்து, தொழிலாளர்களை திரட்டி சங்கம் அமைத்து, அவர்களது நல்வாழ்வுக்காக போராடியவர். நல்ல பல சட்டங்கள் உருவாக காரணமாக இருந்தவர்.

புகையிலைத் தொழிலாளர் அரங்கில் மட்டுமல்லாது நூற்பாலை, மீனவர், கட்டிட, கட்டுமானப்பிரிவு என அனைத்துப் பகுதி தொழிலாளர்களையும் ஆதரித்து தொடர்ந்து செயல்பட்டு வந்தவர்.

நல்ல சிந்தனையாளர், இடைவிடாது வாசிப்பவர், படைப்பாளர் சில நூல்களை எழுதியுள்ளார். நாடகம் நடத்துவது போன்ற இலக்கிய ஈடுபாடு கொண்டவர். நாடகங்கள் எழுதி, இயக்கியவர்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியிலும், ஏஐடியூசி தொழிற்சங்க அமைப்பிலும் மாவட்ட, மாநில அளவில் பொறுப்புகளை ஏற்று சிறப்பாக செயல்பட்ட பெருமைக்குரியவர்.

தொழிலாளர்களிடமும், பொது மக்களிடமும் பழகுவதில் மிகச் சிறந்த பண்பு கொண்டவர். கட்சியின் ஆரம்ப காலத் தலைவர்கள் அப்புக்குட்டி, கே.ஆர்.சுப்பையா போன்றோரின் வரிசையில் வைத்து போற்றத்தக்கவர்.

தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்காக தீவிரமாக போராட வேண்டிய காலத்தில், அனுபவம் வாய்ந்த மூத்த தொழிற்சங்க தலைவரின் மறைவு, எளிதில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி.எஸ். லட்சுமணன்

### மே 12 (2009)



இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

திண்டுக்கல் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 18 ஆண்டுகளும் – திண்டுக்கல் மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சிறுமலை ஊராட்சி மன்றத் தலைவராகவும், திண்டுக்கல் கூட்டுறவு நிலவள வங்கி தலைவராகவும், மாநில கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசாவில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### முதல்வர் பதவி ஏற்பு விழாவில் வழக்கத்திற்கு மாறாக ‘வந்தே மாதரம்’ பாடலுக்கு முன்னுரிமை!

# தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மூன்றாவது ஒலிக்கப்படுவதா?

## தொல். திருமாவளவன் கண்டனம்!

சென்னை, மே 12-

முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில், வழக்கத்திற்கு மாறாக வந்தே மாதரம் பாடலுக்கு முதன்மைத்துவம் அளிக்கப்பட்டதற்கும், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்பட்டதற்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிறுவனத் தலைவர் திருமாவளவன் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து முதலமைச்சர் விளக்கமளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

இது குறித்த அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்ட தவெக தலைவர் ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர்களாகப் பதவி ஏற்றுக் கொண்ட ஒன்பது பேருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எமது மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். போதை ஒழிப்பு, மகளிர் பாதுகாப்பு, 200 யூனிட் வரை மின் கட்டணம் இல்லை என மூன்று அறிவிப்புகளை இன்று முதலமைச்சர் வெளியிட்டுள்ளார். இதை வரவேற்கிறோம். தமிழ்நாடு அரசின் கஜானா காலியாக இருப்பதாகவும், 10 இலட்சம் கோடி கடன் சுமையை வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். அது குறித்த வெள்ளை அறிக்கை வெளியிடப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் கடன் அளவு 10 இலட்சம் கோடி என்று வெறுமனே குறிப்பிடுவது தவறான புரிதலை ஏற்படுத்தும்; ஏனெனில், கடனை எப்போதும் ஒரு குறிப்பிட்ட அளவுகோலோடு ஒப்பிட்டே மதிப்பிட வேண்டும். கடனை மதிப்பிடுவதற்கான சரியான முறை, அதனை மாநிலத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியோடு (GSDP) ஒப்பிட்டுப் பார்ப்பதே ஆகும். தமிழ்நாட்டின் கடன் அளவு, 15ஆவது நிதிக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள்ளேயே உள்ளது. கடனின் முழுமையான அளவுகளை மட்டும் சுட்டிக்காட்டி அச்சமூட்டுவது, அரசியல் நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படும்.

இன்றைய நிகழ்வில் ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ப் பாடல் மூன்றாவதாக ஒலிக்கப்பட்டிருக்கிறது. வழக்கமாக, அரசு விழாக்களின்போது தொடக்கத்தில் ‘தமிழ்த்தாய் வாழ்த்தினை’ ஒலிக்கச் செய்வது நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டுவரும் ஒரு மரபாகும். ஆனால். இன்று அம் மரபினை மீறி, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை மூன்றாவதாகப் பாடியுள்ளனர். அதாவது, வழக்கத்திற்கு மாறாக ‘வந்தே மாதரம்’ பாடலை முதலாவதாகவும், தேசிய கீதத்தை இரண்டாவதாகவும் இசைத்த பின்னரே, கடைசியாக தமிழ்த்தாய் வாழ்த்தினைப் பாடியுள்ளனர். இந்த அணுகுமுறை மிகவும் அதிர்ச்சயளிப்பதாக உள்ளது.

இது அதிகாரிகளின் கவனக்குறைவால் நிகழ்ந்ததாகக் கருத இயலவில்லை. மாறாக, ஆளுநரின் விருப்பப்படியோ அல்லது ஆளுநரை மகிழ்விக்கவோ செய்தப்பட்டதா என்கிற கேள்வி இயல்பாகவே எழுகிறது. இது குறித்து விளக்கமளிக்க வேண்டியது முதலமைச்சரின் கடமையாகும். இனிவரும் காலங்களிலும் அரசு விழாக்களில் ‘வந்தே மாதரம்’ பாடல் ஒலிக்கப்படுமா? அதுவும் முதலில் இடம்பெறுமா? அல்லது அப்பாடல் இனி ஒலிக்கப்படாமல் தவிர்க்கப்படுமா? அடுத்து, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்கு வழக்கம்போல முதலிடம் தரப்படுமா? இது தொடர்பாகவும் அரசு விளக்கமளிக்க வேண்டும்.

மதச்சார்பற்ற அரசமைக்கவே காங்கிரசு, இடதுசாரிகள், முஸ்லீம் லீக் மற்றும் விசிக ஆகிய கட்சிகளின் ஆதரவைக் கோரியதாக தவெக தரப்பில் சொல்லப்பட்டது. அதனடிப்படையில்தான் திமுக கூட்டணியில் அங்கம் வகித்தாலும் அக்கட்சிகள் ஆதரவளிக்க முன்வந்தன.

ஆனால், மதச்சார்புடைய கருத்தைக் கொண்டது என்கிற விமர்சனத்துக்குள்ளாகும் வந்தே மாதரம் பாடலை பதவி ஏற்பு விழாவில் இசைக்கச் செய்த நிகழ்வு நெருடலை ஏற்படுத்தியுள்ளது. இது ஆதரவளித்த கட்சிகளுக்கும் எதிரான விமர்சனங்களை உருவாக்கியுள்ளது. எனவே, இதற்கு உரிய விளக்கமளிக்க வேண்டியது தவிர்க்க இயலாததாக மாறியுள்ளது.

‘மாற்றம்’ என்னும் முழக்கத்தை முன்னிறுத்தி மக்களின் பேராதரவைப் பெற்று முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள ஜோசப் விஜய், அவரது அரசு மதச்சார்பற்ற அரசாகவே இருக்கும் என்ற உறுதிமொழியைத் தமிழ்நாட்டு மக்களுக்கு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# முப்படை தலைமைத் தளபதியாக என்.எஸ்.ராஜா சுப்பிரமணி நியமனம்!

## தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்!

புதுடெல்லி, மே 12-

புதிய முப்படை தலைமை தளபதியாக தமிழ்நாட்டைச் சேர்ந்த லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ்.ராஜா சுப்பிரமணி நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் முப்படைகளின் தலைமை தளபதியாக அனில் சவுகான் பதவி வகித்து வருகிறார். இவரது பதவிக் காலம் கடந்த ஆண்டு செப்டம்பரில் நிறைவடைந்த நிலையில் இம்மாதம் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டின் புதிய முப்படை தலைமை தளபதியாக மிக மூத்த ராணுவ தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்பிரமணியை ஒன்றிய அரசு நேற்று முன்தினம் நியமித்துள்ளது. 1985ம் ஆண்டில் ராணுவத்தில் சேர்ந்த ராஜா சுப்பிரமணி 40 ஆண்டுகளில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்தவர்.

பாகிஸ்தான் மற்றும் சீனா விவகாரங்களில் நிபுணராக அறியப்படும் ராஜா சுப்பிரமணி, கடந்த ஆண்டு ஜூலை 31ல் ராணுவ துணைத் தலைமை தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அதைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் ராணுவ ஆலோசகராக பணியாற்றி வந்தார். நாட்டின் 3வது முப்படை தலைமை தளபதியாக அவர் வரும் 30ம் தேதி பொறுப்பேற்பார். இத்துடன், ராணுவ விவகாரங்கள் துறையின் செயலாளராகவும் ராஜா சுப்பிரமணி செயல்பாடுவார் என பாதுகாப்பு அமைச்சகம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 2020ம் ஆண்டில் முப்படைகளின் தலைமை தளபதி பதவி உருவாக்கப்பட்டது. முதலில் இப்பதவியில் பொறுப்பேற்ற பிபின் ராவத் கடந்த 2021ல் தமிழ்நாட்டில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார். மும்பையில் பிறந்தவரான ராஜா சுப்பிரமணி தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர். பிராக்னெல் (இங்கிலாந்து) கூட்டு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி மற்றும் டெல்லியில் உள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரியின் முன்னாள் மாணவரான அவர் லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் முதுகலை பட்டமும், சென்னை பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஆய்வுகளில் எம்பில் பட்டமும் பெற்றுள்ளார்.

அசாமில் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் 16 கார்வால் ரைபிள்ஸ் படைப்பிரிவுக்கும், ஜம்மு காஷ்மீரில் 168 காலாட்படை பிரிகேடுக்கும், மற்றும் சவாலான செயல்பாட்டுச் சூழலில் மத்தியப் பகுதியில் 17 மலைப் பிரிவுக்கும் மேற்கு முனையில் ராணுவத்தின் முதன்மையான தாக்குதல் படைப்பிரிவு உட்பட 2 படைப்பிரிவுகளுக்கு தலைமை தாங்கி சிறந்து விளங்கினார். மேற்கு, வடக்கு எல்லை இரண்டிலும் ஆழ்ந்த அனுபவம் கொண்டவர் ராஜா சுப்பிரமணி என பாதுகாப்பு அமைச்சக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**★ கடற்படை தளபதியாக சுவாமிநாதன் நியமனம்!**

தற்போதைய கடற்படை தளபதியாக உள்ள தினேஷ் குமார் திரிபாதியின் பதவிக்காலம் வரும் 31ம் தேதியுடன் முடிவடையும் நிலையில், புதிய தளபதியாக துணை அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 1987ல் கடற்படை அதிகாரியாக நியமிக்கப்பட்ட கிருஷ்ண சுவாமிநாதன், தகவல் தொடர்பு மற்றும் மின்னணு போர் உத்தியில் நிபுணத்துவம் பெற்றவர். தற்போது, மேற்கு கடற்படை தளத்திற்கு தலைமை தாங்கும் சுவாமிநாதன் பெங்களூருவை சேர்ந்தவர். இவர் வரும் 31ம் தேதி பதவி ஏற்க உள்ளார்.